17-12-2023 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 06.03.1997

சிவஜெயந்தியின் பரிசு - கடின உழைப்பை விட்டு மகத்துவத்தின் ஊஞ்சலில் ஆடுங்கள்

இன்று சுயம் சிவதந்தை தம்முடைய நாலாபுறத்திலிருந்து வந்துள்ள குழந்தைகளுடன் தமது ஜெயந்தியைக் கொண்டாட வந்துள்ளார். சுயம் தந்தை சந்திப்பதற்காகவும் கொண்டாடுவதற் காகவும் வந்திருப்பது குழந்தைகளுக்கு எவ்வளவு பாக்கியம்! உலகத்தினரோ அழைத்துக் கொண்டே இருக்கிறார்கள் -- வாருங்கள், எப்போது வருவீர்கள்? எந்த ரூபத்தில் வருவீர்கள்? அழைத்துக் கொண்டே இருக்கிறார்கள் மற்றும் குழந்தைகள் உங்களோடு கொண்டாடு வதற்காக சுயம் தந்தை வந்திருக்கிறார். இத்தகைய விசித்திரமான காட்சி ஒரு போதும் கனவில் கூட யோசித்துப் பார்த்திருக்க மாட்டீர்கள். ஆனால் இன்று சாகார ரூபத்தில் கொண்டாடுவதற்காக ஓடோடி வந்திருக்கிறீர்கள். தந்தையும் நாலாபுறத்திலும் உள்ள குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி யடைந்து கொண்டிருக்கிறார் -- ஆஹா சாலிகிராம் குழந்தைகளே, ஆஹா! ஆஹா சாகார சொரூபதாரி வரப்போகும் ஃபரிஸ்தாவிலிருந்து தேவதை ஆக விருக்கும் குழந்தைகளே ஆஹா! பக்த குழந்தைகள் மற்றும் ஞானம் நிறைந்த குழந்தைகளாகிய உங்களுக் கிடையில் எவ்வளவு வேறுபாடு! பக்தர்கள் பாவனையின் அல்பகால பலன் பெற்றுக் குஷியடைகிறார்கள். ஆஹா ஆஹா என்ற பாடலைக் கொண்டாடிக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் ஞானம் நிறைந்த குழந்தை களாகிய நீங்கள் கொஞ்சம் அல்பகால பலன் இல்லை, ஆனால் தந்தையிடமிருந்து முழு ஆஸ்தி பெற்று, ஆஸ்திக்கு அதிகாரி ஆகி விடுகிறீர்கள். ஆக, பக்த ஆத்மாக்களுக்கும் மற்றும் ஞானம் நிறைந்த ஆத்மாக்கள் உங்களுக்கும் இடையில் எவ்வளவு வேறுபாடு! பக்தர்களும் கொண்டாடவே செய்கிறார்கள். நீங்களும் கொண்டாடு வதற்காக வந்திருக்கிறீர்கள். ஆனால் கொண்டாடுவதில் எவ்வளவு வேறுபாடு! சிவஜெயந்தி கொண்டாட வந்திருக் கிறீர்கள் இல்லையா? ஓடோடி வந்திருக்கிறீர்கள். சிலர் அமெரிக்காவில் இருந்து, சிலர் லண்டனில் இருந்து, சிலர் ஆஸ்திரேலியாவில் இருந்து, சிலர் ரஷ்யாவில் இருந்து, எவ்வளவு அன்போடு வந்து சேர்ந்திருக் கிறீர்கள்! ஆக, பாப்தாதா, தந்தையின் ஜெயந்தி, அதோடு கூடவே குழந்தைகளுக்கும் ஜெயந்தி. ஆக, தந்தையோடு கூடவே குழந்தைகளின் ஜெயந்திக்காகவும் வாழ்த்துகள். வாழ்த்துகள். வாழ்த்துகள்! ஏனென்றால் தந்தை தனியாக இந்த சாகார உலகில் குழந்தைகள் இல்லாமல் எந்த ஒரு காரியமும் செய்ய முடியாது. குழந்தைகள் மீது எவ்வளவு அன்பு! தனியாகப் பிரிக்கவே முடியாது. முதலில் குழந்தைகளை நிமித்தமாக்கிப் பிறகு முதுகெலும்பாகி அல்லது இணைந்தவராகி (கம்பயின்டு) செய்விப்பவராகி, நிமித்தமாகிக் குழந்தைகள் மூலம் காரியம் செய்வித்துக் கொண்டிருக்கிறார். சாகார உலகில் தனியாக, குழந்தைகள் இல்லாமல் இருக்க அவருக்குப் பிடிக்கிறதில்லை. நிராகாரி உலகிலோ, குழந்தைகள் நீங்கள் தந்தையைத் தனியாக விட்டுச் சென்று விடுகிறீர்கள். தந்தையின் கட்டளைப்படி தான் செல்கிறீர்கள். ஆனால் சாகார உலகில் தந்தையால் குழந்தைகள் இல்லாமல் இருக்க முடிவ தில்லை. குழந்தைகள் அவசியம் துணையாக இருக்க வேண்டும். குழந்தைகளும் உறுதி கொடுத்திருக்கிறார்கள் - கூடவே இருப்போம், நிராகார

உலகம் வரை மட்டும் கூடவே செல்வோம்.

பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார் - குழந்தைகள் அனைவருக்கும் பாபாவின் ஜெயந்தி கொண்டாடுவதற்கான ஊக்கம்-உற்சாகம் எவ்வளவு உள்ளது! ஆக, பாபாவும் கூட பாருங்கள், குழந்தைகளின் அன்பில் உங்களோடு சாகார சரீரத்தை லோனாக எடுத்து வந்து சேர்ந்திருக்கிறார். இதைத் தான் அலௌகிக அன்பு என்பது. குழந்தை கள் பாபா இல்லாமல் இருக்க முடியாது. பாபாவும் குழந்தைகள் இல்லாமல் இருக்க முடியாது. அன்பும் அதிகம் உள்ளது. அதோடு விலகி யிருப்பதும் கூட அதிகம். எனவே பாபாவின் மகிமையே விலகியவராகவும் அன்பான வராகவும் இருப்பவர் என்பது தான். குழந்தைகள் பாபாவுக்காக அநேக விதமான பரிசுகள், கார்டுகள் (வாழ்த்து அட்டைகள்) ஏதேனும் பொருள்கள், மனதின் ஊக்கத்தினுடைய கடிதங்கள், என்ன வெல்லாம் கொண்டு வந்திருக்கிறார்களோ, பாபாவிடம் இன்று வதனத்தில் அனைத்துப் பரிசுகளின் மியூசியம் வைக்கப் பட்டுள்ளது. உங்களது மியூசியம் சேவைக்கென்று உள்ளது. பாபாவின் மியூசியம் அன்புக்கானது. ஆக, என்னவெல்லாம் அனைவரும் கொண்டு வந்திருக் கிறீர்களோ, அல்லது அனுப்பியிருக்கிறீர்களோ, அனைவரின் அன்பு நிறைந்த பரிசுப் பொருள்கள் பாபாவிடம் இப்போதும் கூட மியூசியமாக வைக்கப்பட்டுள்ளது. அவற்றைப் பார்த்துப் பார்த்து பாபா மகிழ்ச்சி யடைந்து கொண்டிருக்கிறார். பொருள் பெரியதில்லை, ஆனால் எப்போது பொருளில் அன்பு நிறைந்து விடுகிறதோ, அப்போது அந்தச் சிறிய பொருளும் கூட மிக உயர்ந்ததாகி விடுகிறது. ஆக, பாப்தாதா பொருளைப் பார்க்கவில்லை. காகிதத்தின் கார்டையோ, கடிதத்தையோ பார்க்கவில்லை. ஆனால் அதில் நிறைந்துள்ள மனப்பூர்வ அன்பைப் பார்க்கிறார். எனவே சொன்னார் - பாபாவிடம் அன்பின் மியூசியம் உள்ளது. அந்த மாதிரி மியூசியம் உங்கள் உலகத்தில் இல்லை. இருக்கிறதா அந்த மாதிரி மியூசியம்? இல்லை. எப்போது பாபா அன்பின் ஒவ்வொரு பரிசைப் பார்க்கிறாரோ, அப்போது பார்த்ததுமே குழந்தைகளின் முகம் அதில் தென்படுகிறது. அந்த மாதிரி கேமரா உங்களிடம் உள்ளதா? இல்லை. பரிசைப் பார்த்து பாப்தாதாவுக்கு ஒரு சுப சங்கல்பம் எழுந்தது. சொல்லவா? செய்ய வேண்டியதிருக்கும். செய்வீர்களா? தயாரா? யோசிக்கக் கூடாது.

பாப்தாதாவுக்கு சங்கல்பம் எழுந்தது -- இந்தப் பரிசோ பாபாவிடம் சென்று சேர்ந்தது. ஆனால் அதோடு பாப்தாதாவுக்கு இன்னும் ஒரு பரிசும் வேண்டும். அந்தப் பரிசைக் கொடுப்பீர்களா? இந்த ஞாபகார்த்தத்தைக் கொண்டாடுகிறீர்கள். சிவஜெயந்தி என்றால் எதையாவது அர்ப்பணிக்கிறார்கள். பலியாகிறார்கள். ஆக, பாப்தாதா யோசித்தார் - எல்லாக் குழந்தைகளுமே பலியாகிறார்கள். பலியாகி விட்டீர்களா? அல்லது தங்களிடம் இன்னும் கொஞ்சம்-கொஞ்சம் பத்திரப்படுத்தி வைக்கிறீர்களா? இன்றைய நாளில் விரதமும் மேற்கொள்கிறார்கள். எனவே பாப்தாதாவுக்கு சங்கல்பம் வந்தது. குழந்தைகளில் யார் அவ்வப்போது கொஞ்சம் போகப்போகக் களைத்துப் போகிறார்கள். கடின உழைப்பை அதிகம் அனுபவம் செய்கிறார்கள். அல்லது நிரந்தர யோகா வைப்பது என்பது கடினமாக அனுபவம் ஆகிறது. யோசிக்கிறார்கள் -- நடந்து விடும் பாபாவுக்கு ஆறுதல் சொல்கிறார்கள் -- நீங்கள் கவலைப் படாதீர்கள் பாபா, சரியாகி விடும். ஆனால் பாப்தாதா வுக்குக் குழந்தைகளின் களைப்பு அல்லது தனிமை அல்லது சில நேரம் ஏதாவது கொஞ்சம் மனச்சோர்வும் அடைந்து விடுகிறார்கள். நமக்கு பாக்கியம்

இருக்கிறதா எனத் தெரியவில்லையே, சில நேரம் அந்த மாதிரி யோசிக்கிறார்கள் என்றால் அது பாபாவுக்குப் பிடிக்கவில்லை. அனைத்தையும் விட அதிகமாக பாபாவுக்குக் குழந்தைகளின் கடின உழைப்பு பிடிக்கவில்லை. எஜமான் மற்றும் கடின உழைப்பு! பாபாவுக்கும் பாலக் ஸோ மாலிக். பகவானுக்கும் மாலிக் மற்றும் பிறகு கடின உழைப்பு செய்கிறார்கள். இது நன்றாக இருக்கிறதா? கேட்பதற்கும் கூடப் பிடிக்கவில்லை. ஆக, பாபாவுக்கு சங்கல்பம் வந்தது - குழந்தைகள் பிறந்த நாள் பரிசோ அவசியம் கொடுக்கவே செய்கிறார்கள். அப்போது ஏன் இன்றைய நாள் குழந்தைகள் அனைவரும் இதைப் பரிசு ரூபத்தில் கொடுக்கக் கூடாது? அந்த ஸ்தூல பரிசு கொடுத்ததோ வதனத்தில் இமர்ஜ் ஆகி விட்டது. ஆனால் நிராகாரி உலகிலோ, இந்தப் பரிசு இமர்ஜ் ஆகாது. அங்கோ சங்கல்பத்தின் பரிசு வந்து சேர்கிறது. ஆகவே பாபாவுக்கு சங்கல்பம் வந்தது -- இன்றைய தினம் குழந்தைகள் அனைவரிடம் இருந்தும் பரிசு பெற வேண்டும். அப்போது பரிசு கொடுப்பீர்களா, அல்லது கொடுத்து விட்டுப் பிறகு அங்கே சென்றதும் திரும்பப் பெற்றுக் கொள்வீர்களா? மதுபனுக்குரியது மதுபனி லேயே இருந்து விட்டது மற்றும் தங்கள் தேசத்திற்குரியது இந்த தேசத்தில் உள்ளது என்று சொல்வீர்களா? அது போல் சொல்ல மாட்டீர்கள் இல்லையா? குழந்தைகள் மிகவும் சாமர்த்தியசாலி ஆகி விட்டீர்கள். பாபாவுக்குச் சொல்கிறீர்கள் -- நாங்கள் திரும்ப வரட்டும் என்று விரும்பவோ இல்லை, ஆனால் வந்து விடுகிறது. வந்து விடுகிறது என்றால் நீங்கள் ஏன் ஏற்றுக் கொள்கிறீர்கள்? வந்து விடுகிறது - அது சரி தான். ஆனால் எந்த ஒரு பொருளும் உங்களுக்குப் பிடிக்கவில்லை மற்றும் யாராவது வலுக்கட்டாயமாகக் கொடுத்தால் நீங்கள் பெற்றுக் கொள்வீர்களா, அல்லது திருப்பிக் கொடுத்து விடுவீர்களா? திருப்பிக் கொடுத்து விடுவீர்கள் இல்லையா? பிறகு ஏன் ஏற்றுக் கொள்கிறீர்கள்? மாயாவோ திரும்பக் கொண்டு வரும். ஆனால் நீங்கள் ஏற்றுக் கொள்ளாதீர்கள். அந்த அளவுக்கு தைரியம் உள்ளதா? யோசித்துச் சொல்லுங்கள். பிறகு அங்கே போய் சொல்லக் கூடாது - பாபா என்ன செய்வேன்? விரும்பவில்லை, ஆனால் ஆகி விட்டது அந்த மாதிரி கடிதம் எழுத மாட்டீர்கள் இல்லையா? உங்களுடையது தைரியம் மற்றும் பாபாவின் உதவி. தைரியத்தைக் குறைத்து விடக் கூடாது. பிறகு பாருங்கள், பாபாவின் உதவி கிடைக்கிறதா இல்லையா என்று! அனைவருக்கும் அனுபவம் உள்ளது - தைரியம் வைப்பதால் பாபாவின் உதவி சமயத்தில் கிடைக்கிறது மற்றும் கிடைக்கத் தான் செய்யும். இது உறுதி (கேரண்டி) தைரியம் உங்களுடையது, உதவி பாபாவுடையது. ஆக, சங்கல்பம் என்னவாயிற்று? முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் - தைரியம் உள்ளதா இல்லையா என்று. நீங்கள் தைரியவான் தான். ஏனென்றால் தைரியம் இல்லை யென்றால் பாபாவுடையவராக ஆகியிருக்க மாட்டீர்கள். ஆகி விட்டீர்கள் - இதிலிருந்து உறுதியா கிறது - தைரியம் உள்ளது. ஒரு சின்ன விஷயம் செய்கிறீர்கள் - சமயத்தில் தைரியத்தைக் கொஞ்சம் மறந்து விடுகிறீர்கள். ஏதேனும் நடந்து விட்டால் பின்னால் தைரியம் அல்லது உதவி நினைவுக்கு வருகிறது. சமயத்தில் சர்வசக்திகள், சமயத்திற்குத் தகுந்தவாறு பயன்படுத்த வேண்டும் - இதைத் தான் ஞானம் நிறைந்த ஆத்மா. யோகம் நிறைந்த ஆத்மா எனச் சொல்வது.

பாப்தாதாவுக்கு ஒரு விஷயத்தில் மிகுந்த குஷி. எந்த விஷயம் எனத் தெரிகிறதா? சொல்லுங்கள். (அநேகர் சொன்னார்கள்). அனைவரும் சரியாகத் தான் சொல்கிறீர்கள். ஆனால் பாபாவின் சங்கல்பம் வேறு. நீங்கள் மிக

நுட்பமானதைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஞானம் நிறைந்தவர்களாக ஆகி விட்டீர்கள் இல்லையா?

பாப்தாதா குஷியடைந்து கொண்டிருந்தார் - குழந்தைகள் அநேகர் கடிதம் மற்றும் துண்டுக் காகிதத்தில் எழுதியுள்ளனர் - நான் 108-.ல் வருவேன். அநேக கடிதங்கள் வந்துள்ளன. பாப்தாதா யோசித்தார் - இவ்வளவு பேர் 108-இல் வருவார்கள் என்றால் ஐந்து மாலைகள் தயார் செய்ய வேண்டியதிருக்குமே! அப்போது 5-6-7-8 நூல்களின் மாலை தயார் செய்யலாம் இல்லையா? யார் சங்கல்பம் செய்தார்களோ, லட்சியம் வைத்தார்களோ, மிக நல்லது. ஆனால் இந்த சங்கல்பத்தை இடையிடையில் திடமாக்கிக் கொண்டே இருக்க வேண்டும். தொய்வாக விட்டுவிடக் கூடாது. மாயா வந்து விட்டது - இப்போது வருவோமா இல்லையா, தெரியவில்லையே என்று சொல்ல மாட்டீர்களே? தெரியவில்லை, தெரியவில்லை என்று சொல்லக் கூடாது. வரத்தான் வேண்டும் எனத் தெரிந்து கொண்டு விட்டீர்கள். உறுதித்தன்மையின் முத்திரை இட்டுக் கொண்டே இருங்கள். ஆம், நான் வரத்தான் வேண்டும். எது நடந்தாலும் எனக்கு அசையாத, இடைவிடாத நிச்சயம் உள்ளது. அந்த மாதிரி அசைக்க முடியாத, இடைவிடாத நிச்சயம் உள்ளதா? அப்படியானால் மாயாவை அசைத்துப் பார்ப்பதற்காக அனுப்பட்டுமா? வேண்டாமா? பயப்படுகிறீர்களா? மாயா உங்களிடம் பயப்படுகிறதா, நீங்கள் மாயாவிடம் பயப்படு கிறீர்களா? மாயா தனக்கான வாசலைப் பார்க்கிறது - இங்கே திறந்திருக்கிறதா, அங்கே திறந்திருக்கிறதா? தேடிக் கொண்டே இருக்கிறது. நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? மாயா ஒன்றுமே இல்லை. ஒன்றுமில்லை என்று சொல்வீர்களானால் ஒன்றுமில்லாமல் போய்விடும். வர முடியாது, வர முடியாது என்றால் வர முடியாது. என்ன செய்வது? அப்போது மாயாவுக்கான கதவைத் திறந்து விட்டீர்கள், வரவழைத்து விட்டீர்கள். ஆக, இது நல்ல விஷயம் - அநேக குழந்தைகள் 108-இல் வருவதற்கான உறுதிமொழி எடுத்துக் கொண்டி ருக்கிறார்கள். எடுத்திருக் கிறார்கள் இல்லையா? 108-இல் வருவோம் என்று யார் சொன்னார்களோ, அவர்கள் நன்றாகக் கை உயர்த்துங்கள். நன்றாக டிரில் செய்யுங்கள். மிக நன்று. வாழ்த்துகள்! 108-இல் எத்தனைப் பேர் வருவார்கள்? நாம் எங்கே வரப் போகிறோம் என்று அப்படி யோசிக்காதீர்கள். முதலில் எண்ணத் தொடங்குகிறார்கள் - தாதி வருவார், தீதி வருவார், தாதாவும் வருவார் அட்வான்ஸ் பார்ட்டியில் உள்ளவர்களும் வருவார்கள். நமது நம்பர் வருமா இல்லையா, தெரியவில்லை! பாப்தாதா சொல்லியிருக்கிறார் - பாப்தாதா 8-10 நூல்களின் மாலையைத் தயார் செய்வார். அதனால் நீங்கள் கவலைப்பட வேண்டாம். மற்றவர்களைப் பார்க்காதீர்கள். உங்களுக்கு நம்பர் கிடைக்கத் தான் போகிறது. இது பாபா தரும் உறுதிமொழி. நீங்கள் ஒதுங்கக் கூடாது. மாலையின் இடையில் காலியாக வைக்கக் கூடாது. ஒரு மணி இடையில் விடுபட்டது, வெளியேறி விட்டது என்றால் நன்றாக இருக்காது. இதை மட்டும் செய்யக்கூடாது. மற்றப்படி பாபா கேரண்டி தருகிறார் - நீங்கள் கண்டிப்பாக வருவீர்கள்.

இன்றோ கொண்டாடுவதற்காக வந்திருக்கிறோம். முரளி சொல்வதற்காக வரவில்லை. இன்னும் யாரெல்லாம் இருக்கிறீர்களோ, அவர்கள் மாலையில் வந்து விடுங்கள். 108-இன் மாலையில் அனைவருக்கும் வரவேற்பு. இதுவோ பக்தி மார்க்கத்தினர் 108-இன் மாலையை உருவாக்கியிருக் கிறார்கள்.

பாப்தாதாவோ எத்தனை வேண்டு மானாலும் அதிகரிக்க முடியும். இதில் மட்டும் பரிசோ பாபா அவசியம் பெற்றுக் கொள்வார். பரிசை விட்டுவிட மாட்டார். எந்த ஒரு குழந்தையாவது கொஞ்சம் மேலே-கீழே இருந்தாலும், அசையாத நிலையில் இருந்து கொஞ்சம் குழப்பத்தில் வந்தாலும், அதற்கான காரணம் 3 விஷயங்கள் மட்டும் முக்கியமானவை. அதே மூன்று விஷயங்கள் விதவிதமான பிரச்சினை அல்லது பரிஸ்திதி ஆகி வருகின்றன. அந்த மூன்று விஷயங்கள் எவை?

அசுபமான அல்லது வீணானதை யோசிப்பது, அசுபமான அல்லது வீணானதைப் பேசுவது மற்றும் அசுப மான அல்லது வீணானதைச் செய்வது. யோசிப்பது, பேசுவது மற்றும் செய்வது - இதில் நேரம் அதிகம் வீணாகிறது. இப்போது விகர்மங்கள் குறைகின்றன. வீணானவை அதிகமாகின்றன. வீணானவற்றின் புயல் அசைத்து விடுகிறது. முதலில் சிந்தனையில் வருகிறது. பிறகு பேச்சில் வருகிறது. அதன் பிறகு கர்மத்தில் வருகிறது. முடிவில் பார்த்தால் சிலருக்கு பேச்சு மற்றும் கர்மத்தில் வருவதில்லை, ஆனால் யோசிப்பதில் அதிகம் வருகிறது. உருவாக்குவதற்கான சமயம் யோசிப்பதில் கழிந்து விடுகிறது. ஆக, பாப்தாதா இன்று இந்த மூன்று விஷயங்கள் - யோசிப்பது, பேசுவது மற்றும் செய்வது - இவற்றின் பரிசை அனைவரிடம் இருந்தும் பெற விரும்புகிறார். தயாரா? யார் கொடுத்து விட்டார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். கைகளின் வீடியோ நல்ல படியாக ஒவ்வொரு பக்கமும் எடுங்கள். பெரிதாகக் கை உயர்த்துங்கள். டிரில் செய்வதில்லை. அதனால் பாரமாகி விடுகிறீர்கள். நல்லது, அனைவரும் இதைக் கொடுத்து விட்டார்கள். திரும்பப் பெற்றுக் கொள்ளக் கூடாது. வாயிலிருந்து வெளிப்பட்டு விட்டது, என்ன செய்வது என்று சொல்லக் கூடாது. வாயின் மீது திட சங்கல்பத்தின் பட்டன் போட்டு விடுங்கள். திட சங்கல்பத்தின் பட்டனோ இருக்கிறது இல்லையா? ஏனென்றால் பாப்தாதாவுக்குக் குழந்தைகளிடம் அன்பு உள்ளது இல்லையா? ஆக, அன்பின் அடையாளம், அன்புள்ளவரின் கடின உழைப்பைப் பார்க்க விரும்பு வதில்லை. பாப்தாதாவோ இச்சமயம் இதையே யோசிக்கிறார் - பாப்தாதா சாகாரத்தில் சென்று கொஞ்சம் பேச வேண்டும். ஆனால் இப்போதோ ஆகாரி, நிராகாரி. அனைவரும் முற்றிலும் உழைப் பிலிருந்து விலகி, அன்பின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருங்கள். அன்பின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருப்பீர்களானால் உழைப்பு முடிந்து போகும். உழைப்பை முடித்து விட வேண்டும், முடித்து விட வேண்டும் என யோசிக்காதீர்கள். அன்பின் ஊஞ்சலில் மட்டும் அமர்ந்து விடுங்கள். கடின உழைப்பு தானாகவே விடுபட்டு விடும். விடுவதற்கான முயற்சி செய்யாதீர்கள். அமர்வதற்கு, ஆடுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

சிவஜெயந்தி என்றால் குழந்தைகளின் உழைப்பு முடிவதற்கான ஜெயந்தி. சரி தானே? பாபாவுக்கும் குழந்தைகள் மீது நம்பிக்கை உள்ளது. தெரியவில்லை, எப்படி ஒரு சிலர் விலகி விடுகிறார்கள், அது பாபாவுக்கும் தெரிவதில்லை. குடைநிழலின் கீழ் அமர்ந்து இருங்கள். பிராமண வாழ்க்கை யின் அர்த்தமே ஊஞ்சிலில் ஆடுவது தான். மாயாவில் அல்ல. மாயாவும் ஆட்டுவிக்கிறது. அமிர்தவேளை பாருங்கள், மாயா அப்படி ஆட்டுகிறது -- சூட்சுமவதனத்திற்கு வருவதற்கு பதிலாக, நிராகாரி உலகத்திற்கு வருவதற்கு பதிலாக, நித்திராலோகத்திற்குச் சென்று விடுகிறார்கள். யோகா டபுள் லைட் ஆக்குகிறது, ஆனால் தலை பாரமாகி விடுகிறது எனச் சொல்கிறார்கள். ஆக, மாயாவும்

ஊஞ்சலாட்டுகிறது, ஆனால் மாயாவின் ஊஞ்சலில் ஆடக் கூடாது. அரைக்கல்பமாகவோ மாயா வின் ஊஞ்சிலில் நன்றாக ஆடிப் பார்த்திருக்கிறீர்கள் இல்லையா? என்ன கிடைத்தது? ஏதாவது கிடைத்ததா என்ன? களைத்துப் போனீர்கள் இல்லையா? இப்போது அதிந்திரிய சுகத்தின் ஊஞ்சலில் ஆடுங்கள். குஷியின் ஊஞ்சலில் ஆடுங்கள். சக்திகளின் அனுபவங்கள் என்ற ஊஞ்சலில் ஆடுங்கள். அத்தனை ஊஞ்சல்கள் உங்களுக்குக் கிடைத்துள்ளன - அவை இளவரசர்-இளவரசிக்குக் கூடக் கிடைக்காது. எந்த ஊஞசலில் வேண்டு மானாலும் ஆடுங்கள். இப்போது அன்பின் ஊஞசலில் ஆடுங்கள். இப்போது ஆனந்தத்தின் ஊஞசலில் ஆடுங்கள். இப்போது ஞானத்தின் ஊஞசலில் ஆடுங்கள். எத்தனை ஊஞ்சல்கள் கிடைத்துள்ளன! எண்ணற்றவை. எனவே ஊஞ்சலில் இருந்து கீழே இறங்காதீர்கள். செல்லக் குழந்தைகள் என்றால் குழந்தையின் கால் மண்ணில் படக் கூடாது என்று தாய்-தந்தை மடியில் அல்லது ஊஞ்சலில் அல்லது கம்பளத்தின் மீது வைப்பார்கள். மண்ணில் கால் படக்கூடாது என்பார்கள். அந்த மாதிரி நடக்கிறது இல்லையா? நீங்கள் எவ்வளவு செல்லமானவர்கள்! உங்களைப் போல் செல்லமானவர்கள் வேறு யாரும் இருக்கிறார்களா? பரமாத்ம செல்லக் குழந்தைகள் தேக உணர்வில் வருகிறார்கள் என்றால், தேகம் என்பதென்ன? மண் இல்லையா? தேகத்தை என்னவென்று சொல்கிறீர்கள்? மண், மண்ணோடு கலந்து விடும். ஆக, இது மண் இல்லையா? மண்ணின் மீது காலை ஏன் வைக்கிறீர்கள்? மண் நன்றாக இருக்கிறதா? குழந்தைகள் அநேகருக்கு மண் மிகவும் பிடித்திருக்கிறது. அநேகர் மண்ணை உண்ணவும் செய்கின்றனர். ஆனால் நீங்கள் உண்ணக் கூடாது. காலையும் மண்ணில் வைக்காதீர்கள். சங்கல்பம் வருவது என்றால் காலை வைப்பது எனப் பொருள். சங்கல்பத்தில் கூட தேக உணர்வு வரக் கூடாது. யோசியுங்கள், நினைவு வையுங்கள் - நாம் எவ்வளவு செல்லமானவர்கள்! யாருடைய செல்லம் நாம்? சத்யுகத்தில் கூட பரமாத்ம செல்லமாக இருக்க மாட்டீர்கள். அங்கே நாம் தெய்விக ஆத்மாக்களின் செல்லமாக இருப்போம். ஆனால் இச்சமயம் பரமாத்ம தந்தையின் செல்லங்கள் நீங்கள். ஆக, குழந்தைகள் தைரியத்தின் கையால் பரிசு கொடுத்தீர்கள். அதற்காக பாப்தாதா நன்றி சொல்கிறார் - சுக்ரியா, தன்யவாத் (நன்றி) நல்லது.

நாலாபுறத்தின் மிகமிக பாக்கியவான் குழந்தைகள் - சுயம் சிவபாபாவுடன் சிவஜெயந்தி கொண்டாடிக் கொண்டிருப்பவர்கள், அத்தகைய பல கோடி மடங்கு என்ன, எவ்வளவு தான் அதிகத்திலும் அதிகம் எனச் சொன்னாலும் அதுவும் கொஞ்சம் தான். அப்படிப்பட்ட மகான் பாக்கிய வான் ஆத்மாக்கள், சதா தந்தையின் ஆணைப்படி ஒவ்வோர் அடியையும் வைக்கக் கூடிய, பாபா வின் சிநேகி மற்றும் சமீப ஆத்மாக்கள், சதா மாலிக் தன்மையின் அசையாத ஆசன நிவாசி மற்றும் வருங்கால சிம்மாசன நிவாசி சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா பாபாவுடன் கூடவே மகிழ்ச்சியுடன் அன்பின் ஊஞ்சலில் ஆடியவாறு கூடவே செல்லக்கூடிய அத்தகைய பாப்தாதாவின் துணையாக இருக்கும் குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் பிறந்த நாள் வாழ்த்து மற்றும் அன்பு நினைவை ஸ்வீகாரம் செய்து கொள்ளுங்கள். பாபாவின் அனைத்து மாலிக்குகளுக்கும் நமஸ்தே.

வரதானம் : பிராமண வாழ்க்கையில் சதா உழைப்பிலிருந்து விடுபட்டு இருக்கக்கூடிய சர்வ பிராப்திகள் நிரம்பப் பெற்றவர் ஆகுக.

இந்த பிராமண வாழ்க்கையில் தாதா (கொடுக்கும் வள்ளல்), விதாதா

(விதிமுறைகளை வகுத்துத் தருபவர்), வரதாதா (வரங்களை வழங்குபவர்) - மூன்று சம்பந்தங்களில் இவ்வளவு நிறைந்தவராக ஆகிறீர்கள் - கடின உழைப்பு இல்லாமல் ஆன்மிக மகிழ்ச்சியில் இருக்க முடியும். தந்தையை வள்ளல் ரூபத்தில் நினைவு செய்வீர்களானால் ஆன்மிக அதிகாரி என்ற நஷா இருக்கும். ஆசிரியர் ரூபத்தில் நினைவு செய்வீர்களானால் நான் இறை மாணவன் என்ற பாக்கியத்தின் நஷா இருக்கும். மற்றும் சத்குரு ஒவ்வோரடியிலும் வரதானங்களால் நடத்திக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு கர்மத்திலும் சிரேஷ்ட வழி - வரதாதாவின் வரதானம். அது போல் சர்வ பிராப்திகளால் நிரம்பிய வராக இருப்பீர்களானால் கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள்.

சுலோகன்: புத்தியின் லேசான தன்மை மற்றும் நுட்பமான தன்மை தான் அனைத்திலும் அழகிய தனித்தன்மை (பர்சனாலிட்டி) ஆகும்.

குறிப்பு : இன்று சர்வதேச யோகா தினம் - மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை, மாலை மணி 6.30 முதல் 7.30 வரை சகோதர-சகோதரிகள் அனைவரும் யோக அப்பியாசத்தில் அனுபவம் செய்ய வேண்டும் - நான் தபஸ்வி ஆத்மா, பீஜ் ரூப சிவபாபாவுடன் கல்ப விருட்சத்தின் வேரில் அமர்ந்திருக்கிறேன். பீஜ் ரூப பாபாவிடம் இருந்து கிடைத்த சர்வ சக்திகள் என் மூலமாக முழுக் கல்ப விருட்சம் மற்றும் இலைகள் ரூப ஆத்மாக்கள் வரை சென்று சேர்ந்து கொண்டிருக்கின்றன. இதன் மூலம் ஒவ்வொருவரு தெய்வீக சக்தியின் அனுபவம் செய்து கொண்டிருக்கிறார்கள்.